2480

AL/2022(2023)/23/T-II

සියලු ම හිමිකම් ඇවිරිණි /முழுப் பதிப்புரிமையுடையது /All Rights Reserved]

ශ්‍රී ලංකා විභාග දෙපාර්තමේන්තුව
இலங்கைப் பரீட்சைத் திணைக்களம்
Department of Examinations, Sri Lanka

අධ්‍යයන පොදු සහතික පත්‍ර (උසස් පෙළ) විභාගය, 2022(2023)
கல்விப் பொதுத் தராதரப் பத்திர (உயர் தர)ப் பரீட்சை, 2022(2023)
General Certificate of Education (Adv. Level) Examination, 2022(2023)

දේශපාලන විද්‍යාව II
அரசியல் விஞ்ஞானம் II
Political Science II

23 T II

පැය තුනයි
மூன்று மணித்தியாலம்
*Three hours*

අමතර කියවීම් කාලය - මිනිත්තු 10 යි
மேலதிக வாசிப்பு நேரம் - 10 நிமிடங்கள்
Additional Reading Time - 10 minutes

வினாப்பத்திரத்தை வாசித்து, வினாக்களைத் தெரிவுசெய்வதற்கும் விடை எழுதும்போது முன்னுரிமை வழங்கும் வினாக்களை ஒழுங்கமைத்துக் கொள்வதற்கும் மேலதிக நேரத்தைப் பயன்படுத்துக.

**அறிவுறுத்தல்கள்:**

※ இவ்வினாத்தாள் மூன்று பகுதிகளைக் கொண்டதாகும்.

※ பகுதி **I** இலிருந்து குறைந்தபட்சம் ஒரு வினாவையும் பகுதி **II** இலிருந்து குறைந்தபட்சம் இரண்டு வினாக்களையும் பகுதி **III** இலிருந்து குறைந்தபட்சம் ஒரு வினாவையும் தெரிவுசெய்து எல்லாமாக ஐந்து வினாக்களுக்கு விடை எழுதுக.

## பகுதி I

**1.** அரசியலைக் கற்பதற்கான விஞ்ஞான அணுகுமுறையினை விபரிக்குக. (20 புள்ளிகள்)

**2.** 'அரசியல் கோட்பாடு' என்றால் என்ன என்பதனை விபரித்து, அரசியலைக் கற்பதில் 'கோட்பாடு' ஏன் முக்கியத்துவம் பெறுகின்றது என்பதனை ஆராய்க. (20 புள்ளிகள்)

**3.** (i) அழுக்கக் குழுக்கள் என்றால் என்ன என்பதனை விளக்குக. (10 புள்ளிகள்)

(ii) நோக்கத்தின் அடிப்படையில் அரசியல் கட்சிகளுக்கும் அழுக்கக் குழுக்களுக்குமிடையிலான வேறுபாடுகள் எவை என்பதனை ஆராய்க. (10 புள்ளிகள்)

## பகுதி II

**4.** (i) இலங்கையில் 1833 ஆம் ஆண்டு அறிமுகப்படுத்தப்பட்ட கோல்புருக் - கமரன் சீர்திருத்தத்தின் அரசியல் விளைவுகளைச் சுருக்கமாக எடுத்துக் காட்டுக. (10 புள்ளிகள்)

(ii) இலங்கையின் அரசாங்கம் மற்றும் அரசியலை ஜனநாயகமயப்படுத்துவதற்கு டொனமூர் சீர்திருத்தங்கள் வழங்கிய பங்களிப்பினை விளக்குக. (10 புள்ளிகள்)

**5.** சோல்பரி அரசியலமைப்பினை இல்லாதொழிப்பதற்கு ஏதுவாக அமைந்த காரணிகளை விளக்குக. (20 புள்ளிகள்)

**6.** சோல்பரி அரசியலமைப்புடன் ஒப்பிடும்போது, இலங்கையின் 1972 ஆம் ஆண்டு அரசியலமைப்பில் பாராளுமன்றம் தொடர்பாக மேற்கொள்ளப்பட்ட பிரதான மாற்றங்களை விபரிக்குக. (20 புள்ளிகள்)

**7.** (i) இலங்கையின் 1978 ஆம் ஆண்டு அரசியலமைப்பிற்கான 13 வது திருத்தத்தின் நோக்கங்களாக அமைந்தவை யாவை? (05 புள்ளிகள்)

(ii) 1978 ஆம் ஆண்டு அரசியலமைப்பில் கொண்டுவரப்பட்ட 18 வது மற்றும் 19 வது திருத்தங்களின் நோக்கங்கள் மற்றும் பிரதான பண்புகளை ஒப்பிடுக. (15 புள்ளிகள்)

[பக். 2 ஐப் பார்க்க

## பகுதி III

8. (i) ஐக்கிய அமெரிக்க சமஷ்டி அரசாங்க முறையில் மத்திய அரசாங்கத்திற்கு உரித்தாகும் அதிகாரங்களை சுருக்கமாக விபரிக்குக. (10 புள்ளிகள்)

(ii) பிரித்தானியாவினுடைய ஒற்றையாட்சி அரசாங்க மாதிரி அண்மைக்காலங்களில் மாற்றத்திற்கு உள்ளாகியிருக்கும் விதத்தினை எடுத்துக்காட்டுக. (10 புள்ளிகள்)

9. (i) பொதுக் கொள்கையினைக் கற்பது ஏன் முக்கியத்துவம் பெறுகின்றது? (05 புள்ளிகள்)

(ii) பொதுக் கொள்கைச் செயன்முறையில்
(அ) சட்டத் துறையின் வகிபங்கு
(ஆ) சிவில் சமூகத்தின் வகிபங்கு என்பனவற்றினை விளக்குக. (15 புள்ளிகள்)

10. பின்வரும் தலைப்புகளில் ஏதேனும் **இரண்டுக்குச்** சிறுகுறிப்பு எழுதுக.

(i) மோதல் தீர்வு செயன்முறை

(ii) இலங்கையின் நிறைவேற்று அதிகாரம் கொண்ட ஜனாதிபதி முறை தொடர்பான விமர்சனங்கள்

(iii) உலக அரசியலின் புதிய போக்குகள்

(iv) ஜனநாயக ஆட்சிமுறையும் இலங்கையின் அனுபவங்களும்

(v) இலங்கையின் வெளிநாட்டுக் கொள்கையின் அண்மைக்காலப் போக்குகள்

(10 × 2 = 20 புள்ளிகள்)

* * *